## ஊடக அறிவித்தல்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 2020

# தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒருங்கிணைந்த ஊடக அறிவித்தல்

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி கொழும்பு, இலங்கை

உலகளாவிய பேரழிவுக்கு முன்னால் அரசியலமைப்பு ரீதியான பிரச்சினையொன்றை தருவித்துக் கொள்ளளாதிருப்பதற்கு உரிய தரப்பினர்கள் தயவுசெய்து பொறுப்பாகவிருக்கவும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் தேதி நடைபெறவென விதிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தேர்தல், தேர்தல் ஆணைக்குழுவினால் அதன் தத்துவத்துக்கமைய ஒத்திவைக்கப்பட்டுள்ள பின்னணியில், அதுதொடர்பாக உருவாகி வருகின்ற முனைப்பான சமூக ரீதியான சூழமைவின் பால், இதன் கீழ் கையொப்பமிட்டுள்ள இந்நாட்டில் தொழிற்படு நிலையிலுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தமது கூடிய கவனத்தையும் அக்கறையையும் செலுத்திய வண்ணமுள்ளன.

அத்தோடு அனர்த்தம் மிகு ஒரு சூழ்நிலையில் தன்னிச்சையாக எடுக்க முடிந்த மிகக் கிட்டியதும், பொருத்தமானதுமான நடவடிக்கையான தேர்தலை ஒத்தி வைப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு எடுத்த உடனடி நடவடிக்கை தொடர்பாக எமது முறையான மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதோடு, கொவிட்- 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையமொன்றை நிறுவியதனூடாக, நிகழவிருந்த பேனர்த்தத்தைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கும் எமது புகழாரம் உரித்தாகுமென்பதையும் ஈண்டு குறிப்பிட விரும்புகின்றோம்.

இங்கு தேர்தல் ஆணைக்குழு கௌரவ ஜனாதிபதி அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஜனாதிபதியின் செயலாளருக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் அனுப்பி வைத்த கடிதங்களின் பாலும், அவற்றிற்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதியின் செயலாளரினால் ஆற்றுப்படுத்தப்பட்ட கடிதத்தின் பாலும் விசேட கவனம் ஈர்க்கப்பட்டதென்பதையும் வலியுறுத்த வேண்டும், இக்கடிதங்களூடாக முனைப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள நியதிச் சட்ட மற்றும் சட்ட ஏற்பாடுகளை மீள எடுத்துரைத்தல் அல்லது விவாதத்திற்குப் பங்களிப்பு வழங்குதல் என்பன

இவ்வொருங்கிணைந்த ஊடக அறிவித்தலின் குறிக்கோளல்ல, கண்காணிப்பு அமைப்புக்களென்ற வகையில் கூட்டாக வலியுறுத்திக் கூற விரும்புகின்ற அடிப்படை விடயம் யாதெனில், தேசிய இடுக்கண் ஒன்றை எதிர்கொண்ட வண்ணம் அரசியலமைப்பு ரீதியான பிரச்சினையின் பால் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்குள்ள வரையறுக்கப்பட்ட அவகாசத்தைக் கூட நீக்கிவிட்டு, தவறான கருத்துக்களற்ற சமூக அரசியல் பின்னணியொன்றைக் கட்டியெழுப்புதல் அந்தந்த நியதிச்சட்ட நிறுவனங்கள் போன்றே இந்நாட்டின் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரின் மறுக்கமுடியாத பொறுப்பும் கடமையும் என்பதுமாகும்.

எதிர்பாராததும் அதிபயங்கரமானதுமான கொவிட்-19 வைரஸ் நோயினால் பிறப்பெடுத்துள்ள கொடிய விளைவுகளூடாக பாரிய பாதிப்புக்கு இலக்காகியுள்ள ஒரு துறை தேர்தல் செயன்முறையாகும். உரிய காலத்தில் நடாத்தப்பட வேண்டியிருந்த உலக மட்டத்திலான சுமார் முப்பது (30) தேர்தல்களை இன்று நிச்சயமற்ற ஒரு முடிவிற்கு இட்டுச் சென்றுள்ளது இவ்வனர்த்தமே ஆகும். அதற்கமைய எமது பொதுவான அவதானிப்பு யாதெனில், இந்நாட்டின் சட்டவாக்கத் துறையான பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள பின்னணியில் நிறைவேற்றுத் துறைக்குரிய கடப்பாடுகள் மிகத் துரிதமாக ஆற்றப்படல் வேண்டுமென்பதாகும்.

நிறைவேற்றுத்துறை கட்டாயம் ஆற்ற வேண்டிய நியதிச்சட்டப் பணிப்பொறுப்புக்கள் அபரிமிதமானவையாகும். அவற்றுக்கு மேலதிகமாக திடீரென முளையெடுத்துள்ள இப்பிரச்சினை மிக்க பின்னணியை மிக நுணுக்கமான கூர்ந்தாய்வுடன் தீர்த்துக் கொள்வதற்காக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியிருக்கிறது. பாராளுமன்றப் பொதுத்தேர்தலை அறிவித்தல் எனும் விடயம் நிறைவேற்றுத்துறை மற்றும் தேர்தல் ஆணைக்குழு என்பன மிகுந்த கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளக்கூடாத ஒரு பாரிய பொறுப்பாகும். கொவிட்-19 உருவாக்கியுள்ள தேசிய மட்டத்திலான இடுக்கண் என்பது நாட்டின் அனைத்து மக்களும் ஓர் அணியாகத் திரண்டு கூட்டு மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டிய ஒரு பொன்னான சந்தர்ப்பமாகும். இத்தகைய அரிய சந்தர்ப்பமொன்றை உணர்திறனற்ற ஆட்சிமுறைப் பிரயோகங்களின் பரீட்சார்த்த நடவடிக்கைகளூடாக உரித்தற்றதாக்கிக் கொள்ளாமலிருப்பதற்கான தூரநோக்கொன்று உரிய தரப்பினருக்கு இருக்குமென்றே நாம் வெகுவாக நம்புகின்றோம்.

தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு பின்னணியிலும் கூட வலுவாக்கத்திலுள்ள வேட்பு மனுக்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர்கள் உணர்திறன் மிகு காலப்பகுதியில் கூட தமது வேட்பாண்மையை ஊக்குவிக்கின்ற விதத்திலான பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுகின்ற விதத்தினை நாம் தொடர்ச்சியாக அவதானித்து

வருகின்றோம். அதற்கு இணையாக உரிய நடவடிக்கைகளை எடுக்கின்ற போது தேர்தல் ஆணைக்குழுவிற்குள்ள மட்டுப்பாடுகள் தொடர்பாகவும் நாம் போதியளவு புரிந்துணர்வுடனேயே விளங்குகின்றோம்.

ஏற்கனவே எமது சகோதர மக்களில் பெருந்தொகையானோர் உதவிக்கரம் நீட்டப்பட வேண்டியவர்களாக காலத்தை ஒட்டியவண்ணமுள்ள அதேவேளை, உரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான அரசாங்கப் பொறிமுறையொன்று ஏற்கனவே அமுலிலுள்ளது, அப்பொறிமுறையோடு எந்தவொரு வேட்பாளரும் இணைந்து கொண்டு பிரச்சார நோக்கமேதுமின்றி நிவாரணச் செயன்முறைக்கு பங்களிப்புச் செலுத்துவதற்கு எவ்வித தடையுமில்லை.. அவ்விடயங்களைக் கருத்தில் கொள்ளாமல் மிகுந்த மனிதாபிமானத்தோடு நிகழ்த்தப்பட வேண்டிய மாபெரும் பொறுப்பினை அரசியல்மயப்படுத்த முயலுகின்ற வேட்பாளர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசியல் கட்சித் தலைவர்கள் முன்வரவேண்டியுள்ளது..

இத்தகைய தீர்மானம் மிக்க ஒரு சந்தர்ப்பத்தில் தேர்தலை நடாத்துகின்ற போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தீர்மானிக்கின்ற காரணிகளாக வெறுமனே சட்ட ஏற்பாடுகளை மாத்திரம் கொள்ள முடியாது. மாறாக சுகாதார அதிகாரிகளின் அவதானிப்புக்கள், முடிவுகள் என்பவற்றின் பாலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய எமது பொதுவான தீர்மானம் யாதெனில், பாராளுமன்ற பொதுத் தேர்தலோடு தொடர்புடைய திகதியைத் தீர்மானிப்பதற்காக நிகழ்கால தேசிய அனர்த்த முகாமைத்துவத்திற்கென நிறுவப்பட்டுள்ள தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் மற்றும் ஏனைய உரிய சுகாதாரத் துறையினரூடாக போதிய சான்றுறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியமென்பதாகும்

இந்நாட்டின் எந்தவொரு வாக்காளரோ அல்லது அப்பணியில் ஈடுபடுகின்ற அலுவலரோ அபாயத்திற்குட்பட மாட்டாரென்ற சான்றுறுதிப்படுத்தலினூடாக தேர்தலுக்கான திகதியை நிச்சயப்படுத்திக் கொள்ளல் பெரிதும் பொருத்தமாகும். தேர்தலை நடாத்துவதென்பது தொடர்ச்சியான மக்கள் செயற்பாடுகள், இடையீட்டுத் தொடர்புகள் என்பவற்றுடன் கூடிய ஒன்றென்பதே எமது கருத்தாகும்.

இங்கு வேட்பாளர்களுக்கு தமது தேர்தல் பிரச்சாரங்களை தேர்தல் சட்டங்களோடு இணைந்து உயர்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான உரிய சந்தர்ப்பங்கள் மற்றும் போதியளவிலான பிரச்சாரக் காலப்பகுதி என்பவற்றை ஈட்டிக் கொடுத்தல் தேர்தல் ஆணைக்குழுவிற்குரிய ஒரு பொறுப்பாகும். பிரஜைகளுக்கு தாம் விரும்பிய விதத்தில் தேர்தலோடு தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான பூரண

உரிமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டுமென்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மேலும் தேர்தலை நடாத்துவதற்கான எந்தவொரு தீர்மானத்தை எடுத்த போதிலும் அதற்கு இணையாக நாட்டு மக்களின் வாழ்க்கை முறை சகஜ நிலைக்கு மீண்டிருத்தல் ஒரு முன்நிபந்தனையாகக் கருதப்படல் வேண்டுமென்பதையும் உரிய தரப்பினரிடம் வேண்டிக் கொள்ள விரும்புகின்றோம். சமூக தூரப்படுத்தல் போன்றே வாக்காளர்கள் அடிக்கடி வீடுகளுக்குள் முடக்கப்படுகின்ற சிரமமான சூழலுடன் கூடிய தேர்தலொன்றினால் எதிர்பார்க்கப்படுகின்ற முடிவுகள் கிடைக்கப பெற மாட்டாவென்பது விவாதத்திற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகும்.

மேலும் அத்தகைய மதியுரைத் தலையீட்டை மேற்கொள்கின்ற போது உரிய செயற்பாட்டு மத்திய நிலையம் மற்றும் சுகாதாரத் துறையினர் உள்ளிட்ட ஏனைய தரப்பினர்கள் பாதிப்புக்களைவையும் நிகழாவண்ணம் நடந்து கொள்வார்களென பெரிதும் நம்புகின்றோம். ஒரு நாட்டின் ஜனநாயகம் நன்றாக நிலைத்தோங்குவது உரிய காலத்திற்குள் நடாத்தப்படுகின்ற தேர்தல்களூடாக மாத்திரமேயென்பது மட்டுமன்றி அந்நாட்டிலுள்ள அனைத்து தகைமைகளுடன் கூடிய தேருநர்களின் பூரண பங்களிப்பை இரண்டறக் கலக்கச் செய்கின்ற காலகட்டமொன்றில் நடாத்தப்படுகின்ற தேர்தலூடாக மாத்திரமே என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

ஒப்பம்:

ரோஹன ஹெட்டியாரச்சி , நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு - (PAFFREL),
மஞ்சுல கஜநாயக்க , தேசிய இணைப்பாளர், தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் - (CMEV),
அசோக்க ஒபேசேகர, ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் நிறுவனம் - (TISL)
மக்கீன் மனாஸ், நிறைவேற்றுப் பணிப்பாளர். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் - (CaFFE)
ரசங்க ஹரிஸ்சந்திர, நிறைவேற்றுப் பணிப்பாளர், தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் - (NPOC)
ப்ரபோத ரத்நாயக்க, இணைப்பாளர், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான இயக்கம் - (MFFE)
பத்மினீ வீரசூரிய, இணைப்பாளர், இலங்கைத் திருநாட்டின் அன்னையரும் புதல்வியரும் - (MDL)